சிவமயம்



# அமரர்.தில்லையம்பலம் தம்பிராசா அவர்களது இறைபதப்பேறு குறித்த நினைவு மலர்

18.08.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நயினாதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்,
திருகோணமலை திருஞானசம்பந்தர் வீதியையும்,
புளியங்குளத்தையும் வசித்தவரும்
ஆகிய

## அமரர்
# திரு. தில்லையம்பலம் தம்பிராசா

அவர்களின் இறைபதம் குறித்த

## பொன்மலர்

## 2023.08.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 - 02 - 1931



மறைவு 19 - 07 - 2023

## அமரர். தில்லையம்பலம் தம்பிராசா

நயினாதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், திருகோணமலை, 67/2 பிரதானவீதி, புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தில்லையம்பலம் தம்பிராசா (சாமியார்) 19/07/2023 புதன் கிழமை இறையெய்தினார். அன்னார் காலஞ் சென்றவர்களான தில்லையம்பலம் அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும். அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னப்பிள்ளை அவர்களின் மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், இராமநாதன் துரை, நல்லம்மா, தங்கம்மா, பரமலிங்கம், சுப்பரமணியம் மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும் சத்தியபாலன் (கனடா) சாந்தினி (சுவிஸ்) லிங்கேஸ்வரன் (கனடா) இராஜேஸ்வரி (கனடா) துளசிதாசன் (கனடா) தர்சினி (திருகோணமலை) குகதாசன் (யாழ்ப்பாணம்)ஆகியோரின் பாசமிகு தந்தையாரும். இந்திராகாந்தி, நல்லையா, அனுஷா, காலஞ் சென்ற உருத்திரநாதன், கார்த்திகா,யோகன் சித்திரா ஆகியோரின் பாசமிகு மாமாவும் மிதுலன், ஶ்ரீகணன், தர்வீன், அஸ்விகா, அஸ்மிகா, யதுசாயின், உருத்சாயிகா, அபிராம், திவ்யன், பிரஜித், டெய்சாயினி, டிலுக்சிகா, தரணியா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23/07/2023 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை அலஸ்த்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

67/2 பிரதான வீதி,
புளியங்குளம், திருகோணமலை

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவலைகளில்......



அன்னை மடியில்
1931.02.03

ஆண்டவன் அடியில்
2023.07.19

# அமரர். தில்லையம்பலம் தம்பிராசா

அவர்களின்

## திதிவெண்பா

ஆடி மாத வளர்பிறை துதியை

"“ஆண்டு சோபகிருது ஆடிமாதமதில்
பூண்ட பூர்வபட்ச துதியை தனில் - நீண்ட புகழ்
தில்லையம்பலம் தம்பிராசா எனும் சீராளன்
தில்லைக் கடத்தான் திருவடி சேர்ந்த நாள்”"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். திரு. திருமதி. தம்பிராசா பொன்னம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நயினை ஸ்ரீ சத்தியசாயி நயனம்"
(ஸ்ரீ சீரடி சாயி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு இரட்டங்காலி முருகன் ஆலயம்



# பாலமுருகன் கலையரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்..

நாமெல்லாம் உயர் நிலையில் வாழ்ந்திட
ஓய்வின்றி உழைத்து உரம் சேர்த்த உத்தமரே
உங்களுக்காக சேர்த்ததை விட
எமக்கெல்லாம் எது தேவையோ– அதை
உணர்ந்து வழங்கிய வள்ளலே
வாய்ப்பேச்சினை விட செயல் உயர்ந்தது – என
வாழ்ந்து காட்டிய தந்தையே!

வானுறைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர். திரு. தில்லையம்பலம்**
**தம்பிராசா**

அவர்களின்
ஆத்மா மாதுமை சமேத கோணேசப்
பெருமானது பாதங்களில் இணைந்து சாந்தி
பெற அவர் தம் பாதங்களில் இவ் நினைவேந்தல்
மலர் தன்னைச் சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவார்க்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோடும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் நம்மை

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐய னும் நீ
அன்புடைய மாமனும் மாமி யும் நீ
ஒப்புடைய மாதரும் ஒன்பொருளும் நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரு ரும் நீ
துய்ப்பவனும் உய்ப்பளவுத் தோற்று வாய் நீ
துணையாயென் நெஞ்சம் துறப்பப் பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

யானே பொய் என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்து உறுமாறே!

# திருவிசைப்பா

ஏகநா யகனை, இமையவர்க் கரசை,
என்னுயிர்க் கமுதினை, எதிர்இல்
போகநா யகனைப், புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை, மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

# திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப்பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்

## திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்க வாசக சுவாமதிகள் அருளிய திருவாசகம் திருக்கோவையார் ஆகிய

## எட்டாந் திருமுறை

### திருவாசகம்



### சிவபுராணம்

திருப்பெருந்துறையில் அருளியது சிவனது
அநாதி முறைமையான பழமை
( கலி வெண்பா )
திருச்சிற்றம்பலம்

1. நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுது என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!

2. வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பொய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

3. ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடிப்போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

5. கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

6. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராகி முனிவராயத் தேவராயச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

7. எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே!

8. வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆக்க மளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பாய் யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

10. கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாயெம்பெருமான் வல்வினையேன் தன்னை
11. மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் மொன்பதும் வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையச் செய்ய

12. விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நல்ந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

13. தாயிற் சிறந்த தாயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே

15. அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்ந்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

16. நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
17. மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவோம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

18. போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கேட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு . தில்லையம்பலம் தம்பிராசாவின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித்திருநாடாம் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத் தென்மேற்குத் திசையில் அருட்பொலிவும், ஆன்மீகப் புகழும் நிறைந்த 64 சக்தி பீடங்களில் ஒன்றான ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் மகாசக்தி அன்னை ஸ்ரீ நாகபூசணி அம்மையின் ஆலயம் அமைந்துள்ள ஏழு தீவுகளில் ஒன்றான நயினாதீவான நயினையம்பதியில், அதாவது நாகம் பூசித்த நயினைத்தீவில் 03.02.1931ம் ஆண்டு தில்லையம்பலம் அன்னப்பிள்ளைக்கு இரண்டாவது மகனாக பிறந்தார் அமரர் தம்பிராசா தில்லையம்பலம். அவருடைய சகோதரர்களான அமரர்.நாகரெத்தினம், அமரர். இராமநாதன்துரை, அமரர். நல்லம்மா, அமரர். தங்கம்மா, அமரர். பரமலிங்கம், அமரர்.சுப்பிரமணியம், சிவபாக்கியம் ஆகியோருடன் பிறந்தார்.

அவர் தனது பள்ளி பருவத்தை நயினாதீவிலேயே தொடங்கினார். இளமைக்காலத்தில் தொழில் மேன்மைக்காக கொழும்பு நகருக்கு சென்று விற்பனை முகவராகப் பணி புரிந்தார். வேலைகளில் சுறுசுறுப்பும், எல்லோருடனும் அன்புடன் கதைத்து அரவணைக்கும் ஆற்றலும், சிறந்த ஆண் அழகனாகவும், முகவசீகரமுடையவரும் வியாபாரத்தில் நல் நாட்டம் கொண்டவராகவும் விளங்கினார்.

அவர் தனது வாலிப பருவத்தில் கட்டழகு நிறைந்த தோற்றமும், நிமிர்ந்த நடையும், பண்பான குணமும், தன்னடக்கமும் நிறைந்து வாழ்ந்து தனது திருமண பருவத்தில் நயினாதீவு 5ம் வட்டாரத்தில் வாழையடி வாழையாக தொண்டாற்றிய வேளாண் குடிமரபிலே திரு ஆறுமுகம் அவர்களுக்கும் திருமதி சின்னப்பிள்ளை அவர்களின் இல்லறவாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாக புன்னகை அரசியான பொன்னம்மா என்னும் நற்குணவதியை 1959 ம் ஆண்டு திருமணம் செய்தார்.

தம்பிராசா பொன்னம்மா தம்பதிகள் இல்லறத்தை அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்று வள்ளுவர் வாக்குக்கு இணங்க வாழ்ந்து காட்டினார். இறைவன் அவர்களுக்கு நற்குணம் வாய்ந்த ஏழு குழந்தை செல்வங்களை அளித்தார். முதலாவது அறிவில் தலைமகனாக விளங்கிய சத்தியபாலன் (கனடா), இரண்டாவது தலைமகளாக சாந்தினி (சுவிஸ்), மூன்றாவது புன்னகைச் செல்வனான லிங்கேஸ்வரன் (கனடா), நான்காவது நாகம்மாள் நாமம் பெற்ற இராஜேஸ்வரி (கனடா), ஐந்தாவது அன்புமிகு துளிதாசன் (கனடா), ஆறாவது இல்லத்து தேவதை தர்ஷினி (இலங்கை), ஏழாவது அன்புக் கடைக்குட்டி குகதாசன் (இலங்கை) ஆகியோரை நன்மக்களாக பெற்ற பாக்கியம் கொண்ட சிறந்த தந்தையாக விளங்கினார்.

அமரர். தம்பிராசா, பொன்னம்மா ஆகிய இருவரும் தம்பிள்ளைகள் அனைவருக்கும் சிறப்புமிகு கல்வியும், மிகச் சிறப்பான முறையில் திருமணமும் செய்து வைத்து மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்து கொடுத்தனர். பேரப்பிள்ளைகளையும் அரவணைத்து ஆறுதலடைந்தார். இறுதிவரை தனது பேரப்பிள்ளைகளை அணைத்துக் கொண்டே தனது மனதிற்கு இயைந்த மாதிரியே மிகச்சிறப்பாகவும் வாழ்ந்தார்.

தனது பிள்ளைகளைப்போலே அவருடைய மருமக்களும்அவரது மனதுக்கு இயைந்தவாறு அமைந்தனர். அதேபோல் அவர்களும் அன்பாக நடந்து கொண்டனர். இவ்வாறு குறையேதும் இல்லாமல் குடும்பத்தை காப்பாற்றினார்.

இவருடைய சகோதர சகோதரிகளுடனும், மனைவி வழி சகோதர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரி குடும்பங்களுடனும் அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தார். எமது தந்தையிடம் இருந்துதான் நிறைய நல்ல விடயங்களை கற்றுக்கொண்டோம்.

கோணேசப் பெருமானின் நல்லாசியை பெற்ற இவர் தனது இளமைக் காலத்திலேயே அதாவது 1968ம் ஆண்டிலேயே தன்னுடைய சொந்த முயற்சியில் தானாக தொழில் செய்ய வேண்டும் மற்றவர்களுக்கு கீழ் தொழில் செய்ய விருப்பமில்லாமல் தானாக சிறு கடையை ஆரம்பித்தார். 1968ம் ஆண்டு முதல் 2013 வரை திருகோணமலையில் திருஞானசம்பந்தர் வீதியில் வசித்து வந்தார். சாமியார் எனும் பெயரைப் பெற்று வாழ்ந்தார். அவரது பெயரை கூறி அழைப்பதை விட " **சாமியார் ஐயா** " என்றால்தான் அனைவருக்கும் தெரியும்.

நாடு அமைதி இழந்து நின்ற காலக்கட்டத்தில் இல்லம் நாடி வந்த அனைவருக்கும் மனமுவந்து தங்குவசதி, உணவு வசதி என்று தங்களால் இயன்ற சேவையை செய்தார்.

இவ்வாறு இல்லாதவர்களுக்கு கொடுக்கும் மனப்பான்மையும், வஞ்சகமில்லாத குழந்தை மனமும் கொண்ட எங்கள் தந்தை தனது சேவைப்பணிகளை அவரது பிள்ளைகளுக்கு மட்டுமல்லாமல் வறுமையில் வாடுபவர்களுக்கு உதவி செய்து " **தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்**" என வாழ்ந்தார். அப்படி வாழ்வாங்கு வாழ்ந்த அவர் எம்மை பிரிந்து 2023.07.19 திகதி அன்று தனது மண்ணுலக பணி முடிந்து விண்ணுலகம் சென்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தினர் புலம்பல்

எம்மைப் பெற்ற தந்தையே
உம்மைப் பெறநாம் என்னதவம்

முற்பிறப்பில் செய்தோமோ நாமறியோம்
நற்கல்வி யளித்தெம்மை யாளாக்கினீர்

இவ்வுலகில் இசைக்க யாழாக்கினீர்
இவ்வண்ணம் நாம்வாழ மெழுகாகினீர்

இன்றில்லை என்பதனை நாமறிவோம்
என்றெம்மைத் தேற்றுகின்ற வழியறிவோம்

என்றென்றும் துணையாக நீரிருந்தீர்
இன்றைக்குக் கைவிட்டுச் சென்றதேனோ !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

தங்கமான தாத்தாவே
எங்கள் இதயத்தை
அன்பால் நிறைத்தாயே
உன்பால் நாம்கொண்ட
வாஞ்சையை சொல்லத்தான்
வார்த்தைகள் உண்டா
அன்பொழுக எப்போதும்
ஆசையாய் அழைப்பாயே
உம்பிரிவைத் தாங்காது
எம்மிதயம் அழுகிறது
அருகிருத்தி கதை சொல்வதை
அழுதபடி எண்ணுகிறோம்
இனியாரை தாத்தா
எனநாம் அழைப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாளர். தில்லையம்பலம் தம்பிராசா

அன்பர் சத்தியபாலன் அவர்களின் தந்தை, பிறந்தது நயினையம்பதியாயினும் வாழ்ந்தது திருகோணமலைப்பதி. திருஞானசம்பந்தர் வீதியில் அன்றைய ராஜி தியேட்டர், இன்றைய அன்ரு தியேட்டர் முன்பாக, அமைந்த வெற்றிலைக் கடைதான் இவரது தொழில் நிலையம். நெற்றியில் திருநீறும், புருவமத்தியில் குங்குமமும், புன்னகைத்த முகமும், வெறுப்பைத்தராத பேச்சும் இவரது பெயரை யாரும் அறியார்.

சாமியார் கடையென்றால் எல்லோரும் அறிவர். சிறுகடையெனினும் கேட்ட பொருளனைத்தும் கிடைக்கும். பிள்ளைகள் எழுவர், மகன் சத்தியபாலன், தந்தையைப் போலவே அதிர்ந்து பேசாத பண்பாளர். தந்தை மகனுக்கு ஆற்றும் உதவியாய் கல்வி கொடுத்து, நற்பண்பு கொடுத்து, மனிதத்தை விதைத்து மண்ணில் விட்ட பண்பாளர் சாமியார் ஆவார்.

வருவதும் செல்வதும் வளமே என்பதற்கிணங்க வந்தவர். எந்தை ஈசனின் இணையடி சென்றுவிட்டார். சென்றுவிட்ட துயரிலுள்ள குடும்பத்தார், ஆறுதல் பெற வேண்டுகிறோம். என்றும் அவர் சிவனடி நிழலில் இருக்கட்டும்.

போற்றி! ஓம் நமசிவாய.

தவத்திரு அகஸ்தியர் அடிகளார்
தென்கையிலை ஆதீனம் குருமுதல்வர்
ஈஸ்வரபுரம்
கன்னியா
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீற்றுப் பதிகம்

(திருஞான சம்பந்தர் பாடியது)

01. மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆல வாயான் திருநீறே.

02. தேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவரு நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திருஆல வாயான் நிருநீறே

03. முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்திதருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

04. காண இனியது நீறு கவினைத் தருவது நீறுஸ
பேணியணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பத நீறு
மாணத்தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணத் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

05. பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத்தோர் களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது திருவாலவாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. அருந்தமதாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்நீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

07. எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
ஆயிலைப் பொலிதரு சூலத்தாலவாயான் திருநீறே.

08. இராவணனன் மேலது நீறு வெண்ணத் தகுவத நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே.

09. மாலொடெயனறி யாத வண்ணமு முள்ளத நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற் றெம் ஆலவாயான் திருநீறே.

10. குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்துமாலவாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

## ஆடி அமாவாசை

ஆடி அமாவாசை ஒரு இராசியிற் சூரியன், சந்திரன் இருவரும் உறவாகும் வாசியான நாள் அமாவாசி எனப்படும். சூரியனும் சந்திரனும் ஆற்றல் மிக்கவர்கள். ஆற்றல் மிக்க இவ்விருவரும் ஒரு இராசியில் சஞ்சரிக்கும் தினம் புனித தினமாகக் கருதப்படும். அன்று நோன்பு நோற்று விரதம் காத்தல் இறைவன் அருளை, பிரீதியைப்பெற பேருதவியாகும். அமாவாசையில் புண்ணிய தீர்த்தத்திலே நீராடி பிதிர் தர்ப்பணம் செய்து அதிதிகளோடும் சுற்றத்தாரோடும் உண்டு விரத நியமத்துடன் இருப்பது தீர்த்த சிரார்த்தம் எனவும் காமிகசிரார்த்தம் எனவும் கூறப்படும். ஆடி அமாவாசை மிகவும் புனிதமும் அமாவாசைகளிலே வைணவர்களும் விசேடமுமானதாகும். சைவர்களும் அமாவாசையை ஆடி முக்கிய தினமாகக் கொள்வர்.

ஏனெனில் வடக்கு நோக்கி சஞ்சரிக்கும் சூரியன் தெற்கு நோக்கி சஞ்சரிக்கும் ஆரம்ப காலம் ஆடி மாதம் ஆகும். தென்புலத்தார் கடன் இறுக்க விஷேடமான காலம் சூரியன் தெற்கு நோக்கும் ஆடி மாதம் என்ற நம்பிக்கை ஆடி அமாவாசைக்கு தனியிடம் அளிக்கின்றது. முக்கியமாக தந்தையை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து வழிபாட்டில் ஈடுபட்டு தானங்கள் செய்வதால் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைகின்றன. இலங்கையில் திருக்கேதீஸ்வரம், மாமாங்கேஸ்வரம், நகுலேஸ்வரம் என்பன அமாவாசைக்கு பெயர் பெற்ற ஈழத்துத் தலங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெளரி காப்பு

**பத்திரகாளி கவசம்**

**திருச்சிற்றம்பலம்**

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்க எலியூர்தி - மன்னவா
சொற்குற்றம் ஏனைப் பொருள்சேர் தொடைக்குற்றம்
எக்குற்றம் வாராமலே

**வேண்டுதற் கூறு**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாகவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே என்னைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குலம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைந்தல்லோ பதிவிரம் நீ இருந்தாயம்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தாளே
வைகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலப்பயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
பிள்ளைகள் அற்றவர்க்கு பெறுங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
என் தாயே வாழ்ந்திடுவோம். எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்.
நாள் கோள்களெல்லாம் நல்முடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் கொழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையில் பூண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலேதும் கண்திறந்து காட்டுமம்மா
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசையும் விரதமொடு
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
பக்தி மனத்துடனே பரவியணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால் உணர்வுமுண்டு
இச்சகத்தில் உள்ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானங் கிளர்ந்து வர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கினியே தேவிபராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியம்மா காப்பருள்வாய்

**கௌரி காப்பு முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜனை ஒரு சாதனை - பகவானே போதனை.

பஜனை, நாமஸ்மரணை, சங்கீர்த்தனம் என்பவைகளே இந்த யுகத்துக்கு உகந்த சாதனைகள்" என சமய சாத்திரங்கள் அழுத்தமாகக் கூறுகின்றன. இறைவழிபாட்டின் மூலம் ஈசனைப் புகழ்ந்து பாடி உங்கள் உடல் முழுவதும் அவரது கருணை பெருக வேண்டுமென வேண்டுதலே "பஜனை" எனப்படும். பிரார்த்தனை மனிதனுடைய உடல் உளம் இரண்டையும் குணப்படுத்தும் தன்மை வாய்ந்தது. இடைவிடாத பஜனையினாலும் நாம ஜெபத்தினாலும் ஏற்படும் பலன் இதுவே. இக்காரணத்திற்காகவே சமித்திகள் ஒவ்வொன்றும் அதிகாலையில் நகர சங்கீர்த்தனமும் காலை மாலை பஜனையும் செய்யும்படி உறுதியாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா.

### இரட்டங்கால் முருகன் துதி

தேவன் திருமால் முருகன் குகன்
தேடி அவன்தாள் பணிவாய் என்
நாவன் நலனே அருள்வான்
காண் நாடும் அடியார் தமக்கு என்றும்
வாவென்றருள்வான் வள்ளல் அவன்,
வழிக்கு வேலும் மயிலும் துணை,
தாவென்றாலே தருவான்தே
இரட்டாங்காலிக் கின்றதாலே

பாடல் - நயினை அருட்கவி

### பகவான் வாக்கு

எல்லோருடனும் அன்பாக
இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்
பொறுமை தானாக வந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வணக்கம்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 / 02 / 1931 |  | 19 / 07 / 2023 |

## திரு தில்லையம்பலம் தம்பிராசா

எமது ஆத்மஜோதி தமிழ் இணையத்தின் ஆசான் இராஜேஸ்வரி உருத்திரநாதனின் தந்தையும், பழைய மாணவர்களான யதுசாயின், உருத்சாயிகா ஆகியோரின் அம்மப்பாவுமான அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம்.

**நயினைப் பதியாளும் நாகபூசனி நல்லருளின்**
**பயனாக் குலந்தழைக்க வந்த தம்பிராசாவே!**
**அயன் செய்கோலமதாய் அன்புசெய் மக்களுடன்**
**பயன்துய் வாழ்வதனைப் பண்புடனே தயந்தீரோ!**

**நேற்று நீரிருந்து நிழலாக்கிய சொந்தமெல்லாம்**
**தேற்றும் வகையின்றித் திரிகின்ற சோகந்தனை**
**ஆற்றும் வழியின்றித் தவிக்கின்றோம் ஐயாவே!**
**போற்றும் வகைவாழ்ந்த புண்ணிய சீவனன்றோ!**

**பொய்மாயப் பிறப்பினுள் பெருந்தவமாய் வாய்த்தவரே!**
**இம்மாயக் காட்டினுள்ளே இன்முகமாய் வாழ்ந்தவரே!**
**செய்தவத்தின் பயன்நீக்கி செழுஞ்சுடரோன் பதம்நாடி**
**மெய்மைநிலை இதுவென்று பொய்யகன்று போனீரே!**

என்று,

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

# ஆத்மஜோதி தமிழ் இணையம்

**மொன்றியல்-கனடா.**
**(20-07-2023)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்
4d ·

மரண அறிவித்தல்.

திருவாளர்
தில்லையம்பலம் தம்பிராசா
அவர்கள்
நயினாதீவு .திருகோணமலை

நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் . தில்லையம்பலம் தம்பிராசா அவர்கள் 19/07/2023 புதன்கிழமை அன்று திருகோணமலையில் காலமானார் .இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுவதுடன் இவரது குடும்பத்தினருக்கு நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம் தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றது.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் தந்தையார்

திருவாளர். தில்லையம்பலம் தம்பிராசா

அவர்கள் இறையடி சேர்ந்த தகவலைக் கேள்வியுற்று ஆற்றொணாத் துயரில் இருந்தபோது, எங்களோடு கூட இருந்து ஆற்றுப் படுத்திய சொந்தங்கள் உற்றார் உறவுகள் அனைவருக்கும், மற்றும், நேரில் சமூகமளிக்க முடியாமல் தொலைவிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் தந்தவர்களுக்கும், மற்றும் இணையவழியூடாகத் தங்களது அஞ்சலிகளையும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களையும், மலர்வளையம் வழங்கிய ஆத்மஜோதி தமிழர் இணையத்திற்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறோம். அனுதாபங்களையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளையும் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் எங்கள் தந்தையாரின் இறுதிக் கிரியைகள் நிகழ்வினை நேரடி ஒலிபரப்புச் செய்த அமைப்பிற்கும், மற்றும் உணவுகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் பகிர்ந்த அன்பு நெஞ்சங்களுக்கும் மற்றும் அனைத்து இதர வேலைகளில் ஈடுபட்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் திரு. தம்பிராசா ஐயா அவர்களின் பிள்ளைகளாகிய நாங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வி

அமரர். தில்லையம்பலம் + அன்னப்பிள்ளை

- ● நாகரெத்தினம் + நாகலிங்கம் ●
- தம்பிராசா
- ● இராமநாதன்துரை
- ● நல்லம்மா + பரமலிங்கம்
- ● தங்கம்மா + சரவணமுத்து
- சிவபாக்கியம் + நடராசா ●
- ● பரமலிங்கம்
- ● சுப்பிரமணியம்

● தம்பி

● பொன்

| சத்தியபாலன் (கனடா) + இந்திராகாந்தி | சாந்தினி (சுவிஸ்) + நல்லையா | லிங்கேஸ்வரன் (கனடா) + அனுஷா | இராஜேஸ் (கனடா) + ● உருத்திரநா |
|---|---|---|---|
| மிதுலன் | | தர்வீன் | யதுசாயி |
| ஸ்ரீகணன் | | அஸ்விகா | உருத்சாயி |
| | | அஸ்மிகா | |

● அமரர்களைக் குறிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்

அமரர். ஆறுமுகம் + சின்னப்பிள்ளை

- நாகமுத்து
- பொன்னம்பலம்
- சின்னம்மா
- முருகேசு
- விசாலட்சுமி
- ஐயாத்துரை
- முத்துக்குமாரு
- மாணிக்கம்
- பொன்னம்மா
- நாகரெத்தினம்

தம்பிராசா
+
பொன்னம்மா

ஜேஸ்வரி (கனடா) + திரநாதன்
↓
சாயின்
த்சாயிகா

துளசிதாசன் (கனடா) + கார்த்தியாயினி
↓
அபிராம்
திவ்யன்
பிரஜித்

தர்ஷினி (இலங்கை) + இக்னேசியஸ்
↓
டெசாயினி
டிலுக்சிகா
தரணியா

குகதாசன் (இலங்கை) + சித்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org